செய்தி வெளியீடு எண்.301 நாள். 23.4.2008

# சென்னை தரமணியில் ரூ. 1500 கோடி முதலீட்டில் 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் தகவல் தொழில் நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் டி.எல்.எப் நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம்

சென்னை மாநகரில் தொழில்நுட்ப மையமாகத் திகழும் ராஜீவ்காந்தி சாலையில் (பழைய மாமல்லபுரம் சாலை) அமைந்துள்ள தரமணியில் ஏறத்தாழ 26.64 ஏக்கர் நிலப்பரப்பில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), வீடு, உடைமைகள் கட்டுமானத் தொழிலில் இந்தியாவின் முன்னோடி நிறுவனமாக விளங்கும் டி.எல்.எப் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத் துறையில் புதிய **தகவல் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலம்** ஒன்றினை அமைக்கிறது.

இத்திட்டத்தை அமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில், இன்று (23.4.2008) நடைபெற்ற கூட்டுத்துறை ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். இராமசுந்தரம் இ.ஆ.ப., டி.எல்.எப் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. கே.பி. சிங் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

1500 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவுள்ள இந்த தகவல் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் கட்டுமானப் பணிகள் மொத்தம் 45 இலட்சம் சதுர அடி பரப்பில் அமையும். இத்திட்டத்தின் முதல் கட்ட கட்டுமானப் பணிகள் 25 இலட்சம் சதுர அடி பரப்பில் நிறைவேற்றப்பட்டு 2009 ஆம் ஆண்டில் முடிவடையும். எஞ்சிய 20 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் 2011–இல் முடிவடையும். இந்தத் தகவல் தொழில் நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலம் 45 ஆயிரம் இளைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளையும், 10 ஆயிரம் இளைஞர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.

இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு.எம்.எப். பரூக்கி, இ.ஆ.ப, தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் டாக்டர் சி. சந்திரமவுலி, இ.ஆ.ப., டி.எல்.எப் நிறுவனத்தின் முதுநிலை ஆலோசகர் திரு. ஆர். என்.சிங், செயல் இயக்குநர் திரு.ஜெ. சுப்பிரமணியன், முதுநிலை துணைத் தலைவர் திரு. ரமேஷ் கே. சுவாமி, திரு. கே.கே. இராமன் ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.